1426

Regd. No. M. 878.

தொகுதி 10 பகுதி 2

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்

இவைகளைப் பரவச்செய்யும்

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1919ஞு ஜூன்மீ—சித்தார்த்தி ஞு ஆனி மீ

5 - MAR 19

விஷயங்கள்.

தற்கால நிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர். பி. ஏ.	33
பத்திராதிபர் அறிக்கை	40
ஸ்திரீகள்	41
பிரஹ்மஞான தரிசனம்-பாலபாடம்—வி. வெங்குசாமிஐயர்	46
ஓர்கதை-விபச்சித்து உபாக்கியானம்—ஜி. சீனிவாசராவ்	49
சமாசாரம்—அன்னவஸர்தி சங்கம்—பங்களூர்	54
கோபாலகிருஷ்ண கோகலே—வி. ரத்தினம்	55
புத்தகவிமர்சம்	58
பொறுமை—சீதாலக்ஷ்மி அம்மாள்	59
மகாபாரதமும்—மரமுதலிய ஸ்தாவரங்களும்	26

அ. அரங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல். பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2

...களுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

...விக்டோரியா அச்சியந்திர சாலை

...-right Reserved.

உ

ஸ்ரீ ராமஜெயம்.

புது ஜவுளிக்கடை நோட்டீஸ்.

மு. ரா. பெருமாளய்யர்

மேலக்கோபுரவாசல் தெரு, மதுரை

மதுரை மேலக்கோபுரவாசல் தெரு டோர் நிம்பர் 113, தென்சரகில் முன் டிப்டி கலெக்டராயிருந்த மகா-ா-ஸ்ரீ ராமாராயரவர்கள் பெரியமாடி கிரஹத்தில் ஏற்படுத்தியிருக்கும் ஜவுளிக்கடையில் அநேக ஊர்களிலிருந்து வரும் பட்டுச்சேலை, சித்தாடை, பாவாடை, ரவிக்கைகளும், பட்டுக்கரையிலும், சாதாவிலும், ஜரிகையிலும், வேஷ்டி ஜோடி, துப்பட்டா, தினுசுகளும், உள்ளூரில் தயாராகும் ஜரிகை, சாதா, டோரியா, சுன்னடி, சேலை, சித்தாடை, ரவிக்கை, தினுசுகளும் 150, 200 நிம்பர் நூலில் ஜரிகைஜோடி, துப்பட்டாக்களும், சாயவேஷ்டி, தினுசுகளும் இன்னும் அநேக ஜவுளிதினுசுகளும் விலை சலீசாகவும் நயமான ஜவுளிகளாகவும், சொற்பலாபத்திற்கு விசேஷ வியாபாரம் செய்து கொண்டு வருகின்றமையால் தேவையானவர்கள் எங்கள் ஜவுளிக்கடைக்கு வந்து வேண்டிய தினுசுகளை வாங்கிக் கொள்வீர்களென்று எதிர்பார்க்கிறோம்.

☞ N. B.—அயலூர்களிலிருந்து கடிதமூலமாய் வரும் ஆர்டர்களை உடனே கவனித்து அதிக பந்தோபஸ்தாய் வி. பி. பார்சல் மூலமாய் ஜவுளி தினுசுகள் அனுப்பக்கூடும். எங்கள் ஜவுளி விலை விபர ஜாப்தா (கேட்லாக்) வேண்டுமானால் இனாமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மதுரை ஒய். எம். ஏ. ஏ. பிரசுரங்கள்

தங்க மேடல் பரிசு பெற்றவைகள்.

மாணிக்காவாசகர்:—வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார் பி. ஏ. இயற்றிய சிவமணம் கமழும் நாடகம். பக்தி ரஸம் நிறைந்தது. மிகவும் சிறந்தது. வெகு அழகாய் அச்சிடப்பட்டது. விலை மிகச் சொற்பம்.

வரகவி திரு. அ. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய நூன் முகத்துடன் கூடியது 0—8—0.

மங்களம்:—குடும்ப சம்பவங்களை அழகாய் உருவகப் படுத்தும் ரூபகம் விலை மிகச்சொற்பம் 0—4—0.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

விலை சரசம்! நயம் தினுசு!



கண் சாளேஸ்வரக்காரர்களும், பார்வை மட்டாயிருக்கிற சிறுவர்களுக்கும், கண் மங்கல், கண்காந்தல் முதலானவைகளுக்கும் ஆபரேஷன் செய்த கண்களுக்கும் இனமாகப் பரிசோதனை செய்து ஸ்படிக மூக்குக் கண்ணாடிகள் தினுசு தினுசான ரோல்டு கோல்டு, நிக்கல் ப்ரேம்களுடன் விலை சரசமாகக்கொடுக்கப்படும்.

K. R. &, Sons
Scientific opticians Madura.

மீராபாய்:—பக்தியும் ஞானமும் கருணாரஸமும் நிறைந்த நாடகம் புரொபஸர் ஆர். ஸ்ரீநிவாசய்யர் எம். ஏ. இயற்றியது. படங்களுடன் கூடியது. ரூ 1—4—0.

மீனாக்ஷிசுந்தரம்:—கி. வேங்கடராமய்யர் இயற்றியது ஒரு ஹிந்து குடும்ப சம்பவங்களை வெகு சமத்காரமாய்க் காட்டும் இனிய நாடகம். ரூ 0—6—0.

பூர்ணசந்திரோதயம். ஆபீஸ்,
மதுரை.

படங்களுடன் கூடிய கதைகள்.

சுகிர்லாபம்—அல்லது நட்பின் மேன்மை		0—2—0
சிவாஜிமஹாராஜ் }	ஆர். எஸ். நாராயணசாமி	0—2—0
குமணராஜன் —}	ஐயர் பி. எல்.	0—2—0

அரிய ஞானக் களஞ்சியங்கள்.

ஒவ்வொன்றும் 1 அணா.

விக்கிரஹாராதனை	மஹாலயபக்ஷமும் நவராத்திரியும்
லோககுருவின் அவதாரங்கள்	அன்னிபெஸண்டம்மை சரித்திரம்
ஹிந்து என்பவன் எவன்	ஷை செய்யுள்
காயத்திரி	எண்ணங்களின் ரகசியம்
காயத்திரி ராமாயணம்	திருப்பள்ளி எழுச்சி-செய்யுள்.

லோககுருவாகிய பரமன் வருவானேன்

ஒவ்வொன்றும் இரண்டணா

சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம்
தியாஸபியால் உள்ள ப்ரயோஜனங்கள்
சர்வசமயத்தைப்பற்றியும் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் சம்பாஷணை
மரணபயம் வேண்டாம். சாமார்க்கதீபம்

ஒவ்வொன்றும் மூன்றணா

(1) என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது.
(2) ஸ்தூலப்பிரபஞ்ச தர்மங்கள்.—ஆத்மதர்மங்கள்
(3) மோக்ஷம் அல்லது வீடு பெறல்
(4) ஸன்மார்க்க முறையும் ஸம்ஸாரமும்
(5) ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள்
(6) நமது பெரும் துரவஸ்தை
(7) கர்மகாசம் (8) சின்னங்கள்.

(1) தியானக்கிரம விஷயம்	0—4—0
(2) ஹிந்து மததூஷணையின் பரிகாரம்	0—4—0
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம	0—6—0
பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் ஷை	
கல்விகற்பித்தல்—ஈசுவர கைங்கரியம்	0—8—0
மனிதன் வம்சாவளியின் உண்மை	0—8—0
பிரஹ்மஞான விசாரத்தால் நமக்குறும் பயன்யாது	0—9—0
எனது பிரதிஜ்ஞை—வி. ஜினராஜதாஸர்	0—12—0
யோக உபந்யாஸங்கள்—அன்னிபெஸண்டு	0—12—0

தபால் சார்ஜ் வேறு. பூர்ணசந்திரோதயம் ஆபீஸ் மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 10 } சித்தார்த்தி௵ ஆனி௴ 1919௵ ஜூன்௴ { பகுதி 2

தற்கால நிலைமை.

கடைசியாய் கடவுள் கிருபையால் சமாதான உடன்
படிக்கையானது ஜர்மானியர்களால் கைவெழுத்திடப்பட்
பட்டது: அத்துடன் யுத்தமும் முடிந்தது. உலகத்தை
இரத்தவெள்ளத்தில் அழுத்தின யுத்தம் முற்றுப்பெற்ற
தென்று கேட்ட ஒவ்வொருவர் மனதிலும் பால்வார்த்த
மாதிரியாயிற்று. சமாதானமானது உண்மைச்சமாதான
மாய் நிகழவேண்டும் என்பதும், ஆசுவாஸம் செய்து
கொண்டு, பின்னர் ஒருமுறை கொடிய யுத்தத்தைத்
தொடங்கக் காரணமாயிருக்கக்கூடா தென்பதும் எமது
பிரார்த்தனை.

***

இவ்வியுத்தத்தில் ஏராளமான உயிர்ச்சேதமும்
பொருட்சேதமும் நிகழ்ந்தது என்பது வெளிப்படை.
ஆனால் யுத்தம் காரணமாக ஏற்பட்ட நிர்ப்பந்தங்களால்
ஜனங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குப்
போகமுடியாமலும், அங்ஙனமே உணவுப்பொருள்கள்
போக்குவரத்துக்குறைந்தும் ஜனங்கள் மிகவும் கஷ்டப்ப
ட்டிருக்கின்றனர். இவ்விதக்கஷ்டங்கள் சீக்கிரம் நீங்குமாக!

நமது தலைவர் அவர்கள் இங்கிலாந்து போய்ச்சேர்ந்ததும் நல்வரவுகூறி ஏற்கப்பட்டனர் என்று அறியச்சந்தோஷமடைகிறோம். போனகாரியம் ஜயமாகி சீக்கிரம் நம் நாட்டிற்குத் திரும்புவாராக!

***

சென்ற ஐந்து நீண்ட வருஷங்களாக பிரஹ்மஞான சபைத்தலைவரவர்கள் மற்ற நாடுகளுக்குச்சென்று தமது சம்பாஷணையாலும், சன்னதி விசேஷத்தாலும். உண்டாகக்கூடிய உற்சாகத்தையும், ஞானக்கிளர்ச்சியையும், கொடுக்காமல் இந்தியாவிலேயே தமது காலத்தைக் கழித்தார்கள். இந்நாட்டிலேயே இருந்து விட்டதினால், அவர்களுடைய அருமையையும், பெருமையையும், அவர்களது உழைப்பின் பயனையும, அவர்கள் மூலமாய் பிரவகிக்கும் அருள வெள்ளத்தின் சக்தியையும், இந்நாட்டையும், இந்நாட்டின் மூலமாய் உலகத்தையும் உபகரிக்கவேண்டுமென்ற தீவிரமான ஆவலையும் நாம்போதுமானபடி மனோபாவனையால் மனஸ்கரிக்கிறோமோ என்பது சந்தேகத்திற்கிடமாகின்றது. ஏன் என்றால், நமக்கு சுலபமாயக் கிடைக்ககூடிய பொருளை நாம தகுந்தபடி மதிக்கிறதில்லை. ஆனால் ஒரு பொருளானது கிடைப்பது அரிதாயின் அதைப் பெரிதும் பாராட்டுவது உலக இயல்பு- ஆகையால் நமது தலைவர் அவர்கள் நமது மத்தியில் இருந்து நமக்கு வழிகாட்டியாயும் தூண்டுகோலாகவும், இயக்கும் இயந்திர சக்தியாயும் இருந்து, இப்போதும் இங்கிலாந்து சென்றும் நம் நாட்டிற்காக உழைத்து வருகிறார்கள் என்பதற்காக நாம எவ்வளவு நன்றிபாராட்டக் கடமைப்பட்டுளோம என்பதை உணர்வோமாக.

***

இங்கிலாந்து சென்ற உடன், அம்மையவர்களை ஆங்கில பிரஹ்மஞான சபையார் நல்வரவு ஏற்று அவர்களுக்கு வேண்டிய உதவி செய்து வருகிறதாய்த் தெரியவருகிறது. வழக்கப்படி வெகு உற்சாகமாய் அநேக பிரசங்கங்கள்

செய்து வருகிறதாயும், இந்தியாவுக்கு நன்மை ஏற்படுவதற்கு வேண்டிய மட்டில் ஒற்றுமையை உண்டுபண்ண முயன்று வருவதாயும், கேட்கச் சந்தோஷமடைகிறோம். தமது வரவை வெகு ஆவலுடன் அபிமானித்துக்கோருகிற பற்பல தேசங்களுக்கு இந்த முறை செல்லமுடியாது என்றும், ஆகையால் அவ்வத்தேசத்து நண்பர்கள் இங்கிலாந்து சென்று அம்மையவர்களைக் கண்டானந்திக்க எண்ணுகிறார்கள் என்றும் அறிகிறோம்.

***

மறைந்துபோன உண்மைகளை மறுபடியும் வெளிக்காட்டி ஒவ்வொரு மதத்தையும் தெளிவுபடுத்தியும், பலப்படுத்தியும், அவ்வம் மதத்தாருக்கு அவ்வம்மதங்களை மிகவும் உபயோகமுள்ளவையாகச் செய்வது நமது பிரஹ்மஞான சபையின் முக்கிய கைங்கரியங்களில் ஒன்று. கிறிஸ்தவமதத்தில் கர்மம், புனர் ஜன்மம் என்ற உண்மைகள் பெரும்பாலும் மறந்துபோய், அம்மத ஆசாரியர்கள் அத்தத்துவங்களைத் தம்மதத்திற்கு விரோதமான கொள்கைகள் என்று வாதாடுவது பலருக்கும் தெரியும். ஆனால் அவ்வுண்மைகளின்றி, உலக சம்பவங்களை உற்றுணாமுடியாமல் அநேகர் நாஸ்திகர்களாய் மாறுவதையும், அவர்கள் கிறிஸ்தவ மதத்தை மூட பக்தியென்று இகழ்வதும் அறிவோம். அப்படிப்பட்டவர்கள் பிரஹ்மஞான தத்துவங்களைப்படித்தறிந்து மேற்கூறிய தத்துவங்களும் கிறிஸ்துவின் மதத்தில் காணப்படுகின்றன வென்று தெளிந்த பிறகு, கிறிஸ்வ மதத்தில் மீண்டும் பக்தியுள்ளவர்களாய் மாறுவதையும் பார்த்திருக்கிறோம். இப்போது மேனாட்டில் கிறிஸ்தவர்களில் பலர் கர்மம் புனர் ஜன்மம் என்ற உண்மைகளை ஏற்றுக்கொள்கிறார்கள்- இது பிரஹ்மஞான சபையின் சிறந்த பிரயோஜனத்தில் ஒன்றாகும்.

***

'பிஷப், என்ற உயர்ந்த பதவியை வகிக்கும் ஸ்ரீமான் லெட்பீட்டர் அவர்களும, வெட்ஜ்வுட்டும், இன்னும் சிலரும் 'லிபரல் கத்தோலிக் கிறிஸ்துவ மதம்' என்று ஒரு சாகையை ஏற்படுத்தி யிருக்கிறார்களாம், இப்போது

மறந்துபோன உண்மைகளை யெல்லாம், கிறிஸ்தவக்கொள்கைகளில் சேர்த்து மற்ற மதங்களுக்கு விரோதமின்றி, முற்காலத்தில் கிறிஸ்துவாலும் அவரது பிரதமசிஷ்யர்களாலும் கற்பிக்கப்பட்ட ரஹஸ்ய தத்துவங்களுடன் இப்போது போதித்து வருகிறதாகத் தெரியவருகிறது.

***

இந்த நவீன சாகைக்காரர்கள் புதிதாய் வருஷத்துக்கு நான்குமுறை பிரசுரமாகும் ஒரு பத்திரிகையையும் பிரசுரம் செய்து வருகிறார்கள். இந்த சாகையில் பலர் சேர்ந்து பயன் பெறுவதுடன் பத்திரிகையையும் படித்து அறிவைப் பெறுவார்களாக.

***

உலகத்தில் ஒவ்வொரு நாட்டிற்கும் பிரஹ்மஞான சபையின் பிரிவுச்சபை யொன்று தனியாக ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் உள்ள எல்லா லாட்ஜுகளும் இந்தியன் ஸெக்ஷன் என்ற பிரஹ்மஞானப் பிரிவுசபையில் சேர்ந்திருப்பது போல் இங்கிலாந்து, பிரான்சு, உலாந்தா, ஜர்மனி, முதலிய ஒவ்வொரு நாட்டிலும் பிரிவுச்சபைகள் உண்டு. அம்மாதிரியே அயர்லாந்துக்கு பிரிவுச்சபை ஏற்படுத்தி அதற்கு அதிகார சாஸனமும் கொடுக்கவேண்டும் என்று அக்கிராஸனர் அவர்களுக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறதாகத் தெரியவருகிறது. அப்படி அயர்லாந்துக்கும் ஒரு தனி ஸெக்ஷன் ஏற்பட்டால் அந்த நாட்டிலும் பிரஹ்மஞானமானது விரைவாயும், விரிவாயும் பரவுதற்கு ஏதுவாகும். அயர்லாந்து பற்பல விஷயங்களில் இந்தியாவை நிகர்த்தது. இரண்டு தேசங்களிலும் சாதாரண ஜனங்கள் உலக விவகாரங்களிலேயே எப்போதும் ஈடுபட்டவர்களாயில்லாமல் அதற்கு மேற்பட்ட, அத்யாத்மவாழ்வில் பற்றுள்ளவர்கள். ஸ்தூல உலகைக்காட்டிலும் சூக்ஷ்ம உலகம் வேறு ஒன்று உளது என்ற நம்பிக்கையானது இவ்விரு தேசங்களிலும் தான் பெரும்பாலும் காணப்படுகிறது. முற்காலத்தில் எங்ஙனம் இந்தியாவானது சிறப்புற்று விளங்கியதோ அங்ஙனமே அயர்லாந்தும் மேன்மை யுற்றிருந்தது. ஐரோப்பா முழுமையும் ஒருக்கால் அஞ்ஞான இருளால் மூடப்பட்டிருந்த போது அயர்லாந்திலிருந்து தான் ஞான வெளிச்சமானது ஐரோப்பாவில் பரவிற்று. ஆகையால் அயர்லாந்தில் பிரஹ்மஞான சபையின் தனி

லெக்ஷன் ஏற்படவேண்டியது மிக அவசியம் தான். அதனால் அயர்லாந்தின் லௌகிக க்ஷேமமும் அதிகப்படும் என்பதும் சந்தேகமில்லை.

***

கல்யாண காலமானது ஆனிமாதத்தோடு முடிவாகிறது. அதாவது, சாதாரணமாக, தென் இந்தியாவில் சித்திரைமாதம் முதல் ஆனி முடியத்தான் பெரும்பாலும் கல்யாணங்கள் நடக்கின்றன. கல்யாண விஷயத்தில் அநேக மாறுபாடுகள் அவசியம் நடக்கவேண்டுமென்று யாவருக்கும் தோன்றுகிறது. அநேகமாய்ப் பார்த்தால் பள்ளிக்கூடப் பிள்ளைகள் தங்கள் படிப்பு முடியும் முன் கல்யாணம் செய்து கொள்ளுகிறார்கள். பள்ளிக்கூடத்தில் படிப்பவர்கள் எல்லோரும் பிரஹ்மசாரி ஆசிரமத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கவேண்டியது நியாயம். முன் காலத்தில் பிரஹ்மசாரிகள் பூணூல் தரித்து, குருவின் கிருஹத்திற்குச் சென்று, அங்கு அவருக்குப் பணிவிடை செய்து, பிக்ஷை எடுத்து, குருவினிடம் கொடுத்து, அப்பால் அவர் அனுமதியின் பேரில் தானும் உண்டு குருவினிடத்தில் பாடங்களைக் கற்று வந்தார்கள். அவர்களது ஆசாரத்தைப் பற்றி அநேக விதிகள் மனுஸ்மிருதி முதலிய நூல்களில் காணப்படுகின்றன. அவர்கள் மித ஆகாரத்தை உட்கொள்ள வேண்டும். தாம்பூலம், சந்தனம், புஷ்பம், முதலிய தரிக்கக் கூடாது. சரீர சுகத்தைப் பேணக்கூடாது. எப்போதும் சுறுசுறுப்புள்ளவர்களாயிருக்க வேண்டும். சரீரத்தில் மதத்தையும், சோம்பலையும், தூக்கத்தையும் கொடுக்கக் கூடிய உணவுகளை விலக்க வேண்டும். என்று இவ்விதம் பற்பல விதிகள் விதிக்கப் பட்டிருக்கின்றன. மேனாட்டு சுவாஸ்த்ய சாஸ்திரஞர்களைக் கேட்டாலும் மேற்கூறிய விதிகள் அவ்வளவும், சுகத்திற்கு ஹேது என்று ஒத்துக் கொள்வார்கள். ஆனால் தற்காலத்தில் இருக்கும் வழக்கத்தைப் பார்ப்போமானால் மேற்கூறியவற்றிற்கு முற்றிலும் விரோதமாக இருக்கிறது. இவ்விஷயத்தைச் சற்று விசாரிப்போம்.

***

ஆனால் இக்காலத்திலோ கல்யாண மாப்பிள்ளைகளில் பெரும் பாலர் வித்தியாப்பியாசம் முடிவு பெறாதவர்களே. அவர்கள் அனுஸரிக்கும் வழக்கங்கள் பிரஹ்மசாரிகளின் விரதத்திற்கு முற்றிலும் மாறானவைகள். வெற்றிலை பாக்குப்போடாத மாணாக்கர்களும், நாடகம் முதலிய பார்க்காத பையன்களும், ஆடை முதலியவைகளால் தம்மை மிகவும் அலங்கரிக்காதவர்களும், கிடைத்தலரிது. ரஜோ குணத்தையும் தமோ குணத்தையும் அதிகரிக்கத் தக்க ஆகாரங்கள் தான் மாணாக்கர்கள் விசேஷமாய் உட்கொள்ளுகிறார்கள். சந்தனம் அணிவது சர்வ சாதாரணம். சுருங்கச் சொல்லின், நமது வித்யார்த்திகள் கிருஹஸ்தாசிரமிகளின் தர்மங்களைப் பெரும்பாலும் அவலம்பிக்கிறார்கள். ஈரவெங்காயத்தையும், முள்ளங்கிக்கிழங்கையும் மிகவும் கெடுதியான பதார்த்தங்கள் என்று நமது சாத்திரங்கள் கூறும். இவ்விரண்டும் முதற்கண் வைத்தே உணவு உட்கொள்ளுகிறார்கள் தற்காலத்திய மாணாக்கர்கள். ஸாத்விக ஆகாரம் என்பதே கிடைப்பது அரிதாகிறது. காரமும் புளிப்பும், தாளிப்பும் அதிகமான போஜனங்களும், காப்பி தேயிலை முதலிய ராஜஸ பானங்களும் தான் சர்வசாதாரணம். ஆகையால் நமது மாணாக்கர்கள் அடிக்கடி சீக்கால் பீடிக்கப்படுகிறார்கள். மேலும் சரீரப்பயிற்சியே பெரும்பாலும் கிடையாது. உதைபந்து, எறிபந்து முதலிய விளையாட்டுகளில் ஒரு சிலரே பழகுவதும், பலர் வேடிக்கை பார்ப்பதும் வழக்கமாயிருப்பதால் பிந்தியவருக்கு எப்படி தேகப்பயிற்சி ஏற்படும்? மேலும், விசேஷமாகச் செலவு செய்து தேகப்பயிற்சி ஏற்பட வேண்டுமானால், பலர் பக்ஷத்தில் அது கிடைப்பது அரிதாகும். ஆகையால் நமது மாணாக்கர்கள் கிரஹஸ்தாசிரமத்தில் புகுந்து வெகு சில வருஷங்களில் தளர்ச்சியடைந்து, நீரழிவு என்ற பிரமேக வியாதிமுதலிய பிணிகளுக்கு இரையாகி, நாற்பது வயதிற்குள் உடலை நீக்குகிறார்கள். ஆனால் இவ்வித எண்ணிறந்த தீங்குகள், நமது மாணாக்கர்கள் பிரஹ்மசாரிய ஆசிரம விதிகளை அனுஸரியாததால் விளைகின்றன என்பதை நமது பெரியவர்களும் தகப்பன்மார்களும் மனதில் கொள்ளவில்லை யென்பது வெளிப்படை. ஒரு சிலர் அதை அறிந்தும், இத்தீய வழக்கங்களை விலக்க யாதொரு முயற்சியையும் காணோம். இம்மட்டோ? மேற்கூறியபடி சில சீர்திருத்தங்கள் அவசியம் என்று சொல்வோரையே பண்டைக்காலத்துப் பதர் என இகழ்தற்கு இடமாகின்றது. மாணாக்கர்கள் எதேச்சையாய் சுவாதந்தரியத்துடன் திரிவதைத் தடுக்க முயல்வது

இக்கால உணர்ச்சிக்கு மாறு என்றும் போலி ஞானத்தால் கூறுவர். என்றாலும், நம் நாட்டின் உண்மையான அபிவிருத்தியைக் கோருபவர் எல்லோரும் ஆழ்ந்த யோசனை செய்து பிரஹ்மசாரி ஆசிரமத்தின் சாசுவதமும், இயல்புமான விதிகளை மாணாக்கர்கள் அனுஸரிக்கும்படி செய்தால் அன்றி, இந்தியாவானது முன்னேற்றமடைவது இயலாது.

***

மேற் கூறியகாரணங்களால், சென்ற சில மாதங்களுக்கு முன் சென்னை அடையாற்றில் சில மாணாக்கர்களால் பிரஹ்மசாரிகள் சங்கம் என்று ஒன்று துவக்கப் பட்டிருக்கிறது. அதை எந்த ஜாதியாராலும் மதத்தாராலும் வர்ணத்தாராலும், சேரலாம் அதில் 14-வயதுக்குட்பட்ட மாணாக்கர்கள் 'அஸோஷியேட்' என்ற அபிமானிகளாயும், 14-வயதுக்கு மேற்பட்டவர்கள் அங்கத்தினராயும் சேரலாம். பிந்தியவர்கள் அடியில் கண்ட பிரதிஜ்ஜை செய்து கொண்டு அங்கத்தாராக வேண்டும். அதாவது, எனக்கு 21-வயது முடியுமுன்னாவது, என்னுடைய படிப்பு முடியுமுன்னாவது, சௌகரியமாய்க் குடும்ப பரணம் பண்ணும் சக்தி எனக்கு வருமுன்னாவது நான் கல்யாணம் செய்து கொள்ளாமலிருக்க முயலவேணுகவும். எனக்கு தெரிந்த ஒவ்வொரு கல்யாணமாகாத மாணாக்கர்களிடமும் பிரஹ்மசாரி சங்கத்தின் உபதேசத்தைக் கூறவேணுகவும். அப்படி உபதேசத்தைப் பரவச்செய்வதற்கு எனக்கு யோக்கிதை உண்டாகும் வண்ணம், என்னுடைய நடத்தையை சுத்தமாயும், உண்மையாயும் வைத்துக் கொள்வேணுகவும். இந்த சங்கத்தின் விதிகளுக்குக் கட்டுப் பட்டிருப்பேனுகவும்.

***

இச்சங்கத்தின் விதிகள் ஏழாகும். (1) பிரஹ்மசாரியானவன் 5-மணிக்குப் படுக்கையை விட்டுக் குதித்து எழுந்து, உடனே தேகத்தை சுத்தம் செய்து கொள்ள வேண்டும். (2) அப்பால் ஒரு சுத்தமான அமைதியான இடத்தில் உட்கார்ந்து கொண்டு அவன் மதாசாரப்படி கடவுளை தியானிக்கவேண்டும். (3) அவன் தினந்தோறும் நல்ல சரீரப்பயிற்சி செய்து கொண்டு சரீரத்தை பலமுள்ளதாயும், பொறுமையுள்ளதாயும் செய்யவேண்டும். (4) படிக்கும் போதும், மற்றைய சமையங்களிலும் நிமிர்ந்து இருக்கவேண்டும முதுகைக் கூனிக்கொண்டும், மார்பை வளைத்துக்கொண்டும், இருக்கக்கூடாது. செய்ய வேண்டிய காரியமானது எவ்வளவு அற்பமாயினும்

மனதை ஒருமைப்படுத்தி முழு கவனத்துடன் அதைச் செய்யவேண்டும். (5) மற்றவர்களுக்கு மரியாதையாயும் அவர்கள் மனம் நோகாதபடியும் ஒழுகவேண்டும். (6) சாப்பாடானது மிதமாயும் ஸாத்விகமாயும், புஷ்டிதாத்தக்கதாயும் இருக்கவேண்டும். ஆனால் அது பல பாகுபாடுள்ளதாக இருக்கக்கூடாது. ஒவ்வொரு கவளத்தையும் பக்தியுடனும் பசியுடனும் சாப்பிடவேண்டும். (7) சாப்பாட்டிலும் உடையிலும், சுதத்தைப்பேணி அதிதமாக ஒன்றையும் கொள்ளலாகாது. வாசனைத்திரவியங்கள் புஷ்பம், இவைகளை உபயோகிக்கலாகாது. சண்டையிடலாகாது. வீண் வம்புப்பேச்சை விலக்கவேண்டும். வேலைக்காரர்களுடைய வேலையையும், மற்றவர்களுடைய ஸேவையையும் அபேக்ஷிக்கக்கூடாது.

***

மேற்கூறிய சபையானது மிகவும் அவசியம். ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் கிளைச்சங்கங்கள் ஏற்பட்டால் சீக்கிரம் க்ஷேமம் உண்டாகும். வேண்டுவோர் சென்னையில் ஒய். எம். ஐ. ஏ. யிலிருக்கும் பிரஹ்மசாரி சங்கக் காரியதரிசி சி. மஹாதேவனுக்காவது, காஞ்சீபுரம் பிரஹ்மஞான சபையில் இருக்கும் மற்றொரு காரியதரிசி எஸ். ஆர். கிருஷ்ணனுக்காவது எழுதி வேண்டிய விபரங்களைத் தெரிந்துகொள்க.

ஆர். அரங்கசாமி ஐயர்.

பத்திராதிபர் அறிக்கை.

1. எமக்கு கிருபமஎழுதுவோர் தயவுசெய்து பத்திராதிபர் அவர்களுக்கு அல்லது மானேஜர் அவர்களுக்கு என்று மட்டும் எழுதவேண்டும். விலாசத்தில் பேரைப் போட்டெழுதினால் அக்கடிதங்கள் சொந்தக் கடிதங்களுடன் சேர்ந்து போவதினால் அவைகளுக்குப் பதில் கிடைப்பது தாமதமாகும்.

2. பத்திரிகையைப் பெறுவோர் அது விஷயமாய் ஏதாவது கடிதம் எழுதினால் தங்கள் விலாசத்துக்கு முன் போட்டிருக்கும் எண்ணைக் குறித்தே எழுத வேண்டும் இல்லையேல அந்த நபர்களின் பேரைத் தேடமுடியாமல் வீண் சிரமமாகிறது. இதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

ஸ்திரீகள்.

(28-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஆணாகப் பிறந்தவர்கள் மூன்றாம் ஜாதியாகிய வைசியனாயிருந்தாலும் இருபிறப்பாளன் ஆவான். ஆனால் ஸ்திரீயாயப பிறந்தவள், மேலான ஜாதியாகிய, பிராஹ்மண குலத்தில் பிறந்தவளானாலும், இருபிறப்பாளி ஆகமுடியாது. இப்படிபபட்ட துரதிருஷ்டம் பண்டை நாட்களில், ஆரியர்களுக்கேற்பட்ட வழக்கமல்ல எனத்தகும்; ஏனெனில் பார்ஸி ஜாதிக்காரர்கள், அவர்களுடைய வழக்கத்திலும் சம்பிரதாயத்திலும், ஹிந்துக்களைப் போன்றவர்கள். அவர்கள் ஜாதியில், பெண்களும் இந்நாளிலும், யக்ஞோப வீதம் தரிப்பது வழக்கமாயிருக்கின்றது. இந்நாட்டில், பிரஹ்ம வித்யாசபையின் அங்கத்தினர்கள், பிரஹ்ம வித்யா சாஸ்திரத்தின் முழுத்தத்துவத்தையும், அறியவிரும்பினார்களானால், தைர்யமுள்ளவர்களாக ஸ்திரீகளுக்கும், இகம்பரமாகிய எவ்வித காரியங்களிலும், சமமான ஸ்வதந்தரம் கொடுத்து, அவர்களுடைய நடத்தையில் ஸ்திரீகள் குறைவானவர்கள் அல்லவென்று காட்டும் சிரமமான காரியத்தைச் செய்யவேண்டும். அவர்கள் அநேக விதங்களில் இத்தகைய காரியங்களைச் செய்யலாம். அவையாவன:—

(க) பொதுசம்மந்தமான எல்லாக்காரியங்களிலும் ஸ்திரீகளைத் தாராளமாகப் பழக்கவேண்டும். சபைகள் ஏற்பாடு செய்யவேண்டியிருந்தால் ஸ்திரீகளை அலக்ஷியம் செய்யவேண்டாம். அவர்கள் பிரயோஜன மற்றவர்களென்று எண்ணவேண்டாம். அவர்களுடன் ஆலோசனை செய்தும் கமிட்டிகளில் மெம்பர்களாக்கியும், அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவிக்கச் செய்தும், அவர்களுடைய உதவியையும் பெறுங்கள். உபந்யாஸ மேடைகளிலும், மண்டபங்களிலும், பின்னும், இருபக்கங்களிலும், அவர்களை

ஓரே கூட்டமாகச் சேர்த்து விடவேண்டாம். அவர்கள் அவ்விடம், வந்திருப்பது தற்செயலாக ஏற்பட்டதாகவாவது, பயன்படாததாகவாவது கருதவேண்டாம்.

(௫) சபையின் அங்கத்தினரான ஆண்மக்கள், எந்தெந்த சுதந்தரத்தை, அடைந்திருக்கிறார்களோ, அவைகள் யாவற்றையும் ஸ்திரீகள் அடையத்தக்க அனுகூலங்களையும் செய்யவேண்டும். அங்கத்தினர்கள், தமது மனைவிகள், பெண்கள், தாயார்கள் இப்படிப்பட்டவர்களையும் சபையில் சேரும்படி தூண்டவேண்டும். குடும்பங்களிலுள்ள ஆண்மக்கள் சபையில் சேர்ந்திருந்தால், அவர்களது ஸ்திரீகளையும் சபையில் சேர்க்கவேண்டிய, சௌகர்யம் செய்யவேண்டி, சென்ற வருடத்திய காங்கிரஸ் மஹாசபை நடந்த காலத்தில் ஸ்திரீகளுக்காக சந்தாத்தொகையையும், குறைத்திருக்கிறார்கள். இப்போது, ஸ்திரீகள் அநேக விதத்தில் குறைவுபட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஆங்கில உபந்யாசங்களைக்கேட்டறிய முடியாது என்றும் வீட்டுவேலைகள் இருப்பதால், அவர்கள் வீட்டைவிட்டு வெளியில்போக முடியவில்லை என்றும் சொல்லுகிறார்கள். இவ்விதம் ஒவ்வொன்றாக, அநேக தடங்கல்களை, புருஷர்கள் மட்டுமல்ல, ஸ்திரீகளும் கூறுகிறார்கள். ஆனால் வீட்டுக்கடமைகளைக் கட்டாயம் செய்தே தீரவேண்டும். என்றாலும், அவர்கள் வீட்டுக் காரியங்களைச் சரிவர ஒழுங்குபடுத்திக்கொண்டு ஆத்ம சம்மந்தமான கடமைகளைச் செய்வதற்குத் தகுந்த, நேரமும், சௌகர்யமும் செய்துகொள்வதற்கு, எப்பொழுதுமே சாத்தியமாகும். ஸ்திரீகளின் கடமைகள், வீட்டிலிருக்கின்றனவென்றும், புருஷர்களுக்குக்கடமை, வீட்டுக்குவெளியிலிருக்கின்றன, வென்றும், நாம் சொல்லுகிறோம். ஒரு மனிதன் வீட்டுக்கு வெளியே தனக்கு இருக்கும், வேலைகளை, ஒழுங்குபடுத்திக்கொண்டு, உபந்யாசங்களையும், கூட்டங்களையும் போய்ப் பார்க்கக் கூடுமானால், ஸ்திரீகளும் கூடத் தங்கள் வீட்டுக்காரியங்களை, ஒழுங்குபடுத்திக்கொண்டு உபந்யாசங்களைக் கேட்கும்படிக்கும் கூட்டங்களைப்போய்ப்பார்க்கும்

படிக்கும் ஏன் செய்துகொள்ளக்கூடாது? ஸ்திரீகளுடன் யோசித்து உதவிபுரிந்து, யதார்த்தத்தில், ஸ்திரீகளுக்கு அவர்கள் அபிவிருத்திக்கிடையூறான இக்குற்றத்தைத் தொலைப்பதற்கு வேண்டிய உதவி புரிவார்களாயின், இக்காரியத்தைச் செய்தல்கூடும். ஸ்திரீகளே இந்த விஷயத்தில் சோர்ந்தியடைந்திருக்கிறார்கள். புருஷர்கள்ஸ்திரீகளுக்கேற்பட்ட இம்மயக்கத்திலிருந்து அவர்களை விடுவிக்க எவ்வளவோ ஏற்பாடு செய்யக்கூடும். புருஷர்கள் தங்களுடைய ஆகாரசுகங்களைப்பற்றி கொஞ்சம் மட்டாகவே கவனிப்பார்களானால், ஸ்திரீகளுக்கு அவர்களது படிப்பிற்கு வேண்டிய சாவகாசத்தை அதிகமாக்குவதற்குத் தகுந்த உதவி புரியக்கூடும். ஏனெனில், சாதாரணமாக ஸ்திரீயானவள் விசேஷமாகத் தன்னுடைய காலத்தை சணவனும் எஜமானனுமாகிய வருக்குத் தகுந்த ஆகாரங்களைத் தயார் செய்வதில் செலவழிப்பதாகத் தெரியவருகிறது.

(ச) ருதுவாவதற்கு முந்தியாவது, ஆனபிறகுகூட, ஒரு பெண், குழந்தை பெறுவதற்குத் தகுந்த சரீரசக்தியில்லாதிருக்கும் பொழுதாவது, அதாவது பால்யத்தில், விவாகத்தை எவ்விதத்திலும் நடக்காதபடி தடுக்கமுயலவேண்டும். இந்தியா தேசத்தில், இந்த விஷயத்தைப்போன்ற துக்ககரமான விஷயம், வேறொன்றுமில்லை. நான் அடிக்கடி பெண்பிள்ளைகள் பாடசாலைக்குப் போய்ப் பார்க்கிறேன். அவ்விதம் போகும்போதெல்லாம் அழகிலும் ஸௌந்தர்யத்திலும், புஷ்பம் போன்று எந்த தேசத்தில் பிறந்த குழந்தைக்கும் ஸமானமாயுள்ள குழந்தைகளை நான் பார்க்கிறேன். நான் அவர்களைப் பார்க்குங்கால், அவர்கள் இனிவரும் காலத்தில் குழந்தைகளைப் பெறுவதினால் உண்டாகும் பலஹீனத்தினாலும், வியாதியினாலும் பீடிக்கப்பட்டும், அவர்களுடைய இளஞ்சரீரம் வளர்ந்து வருவதில் தடைபட்டுப் போயும் இன்னும் சிசைமயங்களில் விசேஷபாதையை பொறுக்கமுடியாமல் தற்கொலைசெய்து கொள்ளும்படியாகவும் ஏற்படுகிறதென்று நான் யோசிக்கவேண்டியிருக்கிறது.

விவாகமான ஒரு சிறு பெண், கிணற்றில் விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டாள் என்பதை நானறிவேன். மற்றொருவள் தாங்கமுடியாத பாரத்தின் சிரமத்தால் தன் சரீரத்தை நெருப்பால் கொளுத்திக்கொண்டாள். அப்பெண்ணின் படமும் என்னிடம் இருக்கிறது. இப்படிப்பட்ட விஷயங்களை நாம் கவனித்து அவைகளைத் தொலைக்கத் தகுந்தவை யென்று நாம் அறிகிறோம். மஹரிஷிகள் உலாவிவரும் இப்புண்ணிய நாட்டில், சகோதர பாவத்திற்கு விரோதமான கொடுமைகள், என்னென்ன ஏற்பட்டிருக்கின்றன வென்று நாம் அறிகிறோம். கிரந்தங்களில் சொல்லுகிற பிரகாரம், நாம் இரக்கம் கொள்ளவேண்டிய காரியத்தில் ஒன்றும் செய்யாமலிருப்பது பாவமாகிறது. பிரஹ்ம வித்தியா சாஸ்திரத்தை நாம் அறிந்து கொண்டு ஸ்திரீகளின் அபிவிருத்தியைக்குறைத்து அவர்களை ஹிம்ஸைக்குட்படுத்துவதை நிறுத்த ஒருவன் தன்னாலான உதவிபுரியாவிடின், ஜனசமூகத்தின் பாரத்தை அதிகப்படுத்துபவனாகிறான்.

(ஞ) ஸ்திரீகளுக்குக் கல்வி பயிலுவித்தல். நான் இதைப்பற்றி அதிகம் சொல்லத்தேவையில்லை. இது நாம் சாதாரணமாக முதற்படியாகச் செய்யவேண்டியவேலை. முக்கியமாக ஸ்திரீகள் சம்மந்தப்பட்டமட்டில் ஏற்கனவே நாம் இவ்வழியில் முயற்சி செய்து வருகிறோம். ஆனால் எந்தப் பெண்களின் படிப்பானது, பால்ய விவாகத்தினால் தடைபட்டு விட்டதோ, அவர்களின் படிப்பை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த முயற்சியையும் செய்யவேண்டும். இந்திய ஸ்திரீகளின் சங்கத்தாராலும், இதர ஸ்திரீ சபைகளாலும் அநுஷ்டிக்கப்படும் வழிகளில் ஸ்திரீகளின் படிப்புக்காக ஏதேனும் செய்தல் வேண்டும்.

மேற்சொல்லிய விஷயங்களில் இந்திய பெண்மணிகளுக்குள்ள குறைகளை அறிந்து புருஷர்களே அவர்களுக்கு வேண்டிய உதவி புரிந்து மேற்சொல்லிய குறைகளை நீக்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்திய ஸ்திரீகளே

இந்தியர்களுடைய அரிய நிதியாகச்சொல்லப்படும் ஆத்ம ஞானத்தையும் பூர்வீக நாகரீகத்தையும், இது வரையில் காப்பாற்றி வருகிறார்கள். அவர்களை இப்படிப்புத்தி ஹீன ர்களாகச் செய்து, ஆத்மா, மனசு, சரீராதிகள் விருத்திய டைய வழியில்லாமற் போகும்படி செய்தால் இந்தியா பூர்வீக ஆத்ம அபிவிருத்தியையும் ஆத்ம சக்தியை யும் அடைய இடமில்லாமற் போகுமல்லவா? ஒவ் வொரு தேசத்திற்கும் அதனதன் பூர்வீக நாகரீகத்தின் முக்கியாம்சங்களை, விருத்தி செய்தல் பிரும்மஞான சபை யின் தர்மமாக இருக்கிறது. குழந்தைகளுக்கே யல்லாமல் லோகத்திற்கெல்லாம் ஆத்ம ஞானத்தைப் போதனை செய் வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நவீன இந்தியாவுக்குக்கூட காரணபூதர்களாயும் ஈசுவரனுடைய அருள், சக்தி, வெளி ச்சம் முதலியவைகளுக்குப் பாத்திரர்களாகவும் பூர்வத்தில் ஸ்திரீகள் வகித்திருந்த ஸ்தானத்தை திரும்பி அடையும்படி நாம் செய்யவேண்டுமானால்,இந்தியாவில் பூர்வநாகரீகத்தின் முக்கியாம்சங்களை ஏன் திருப்பி ஸ்தாபிக்கமுடியாது?

மிஸ், கே. ப்ரௌனிங்

(இன்னும் வரும்)

மொழிப்பெயர்ப்பாசிரியர் பெயர் எமக்கு அனுப்பப்படவில்லை. ப-ர்.

பிரஹ்ம ஞான தரிசனம் (பாலபாடம்.)

அத்தியாயம் 43.

எண்ணங்களின் உருவங்கள்.

பக்திரூபமான எண்ணங்களும், கடவுளின் பேரில் பிரேமை ரூபமான எண்ணங்களும் அழகான நீலவர்ணமானவை. அவைகளின் உருவமானது எண்ணங்களின் தீவிரத்தையும் குணத்தையும் பொருத்தது. எப்போதும் கடவுளையே தியானித்துக்கொண்டும் அவரிடத்தும் அவருடைய சிருஷ்டிகளிடத்தும் பூர்ண அன்பு பாராட்டிக்கொண்டுமிருக்கிற ரிஷிகள் மிகவும் அழகான உருவங்களை அமைக்கிறார்கள். ஒரு பெரிய எண்ணமானது பலவேறுபட்ட அங்கங்களைக் கொண்டதாயிருந்தால் அப்பெரும் எண்ணமானது அங்கங்களுக்கேற்றவாறு வேறுபாடுள்ளதாய்க் காணப்படுகிறது.

ஆழ்ந்த யோசனைக்காரர்களுடைய சிரசைச்சுற்றிக் கொண்டிருக்கிற எண்ண உருவங்கள் நட்சத்திரங்கள், இலைகள், சிலுவைகள் அல்லது பலவித கணித சாஸ்திர உருங்கள் போலவும் காணப்படுகின்றன. அவை மனோவிருத்திக்குத் தக்கபடி பற்பல வர்ணங்களுடனிருக்கும்.

கோப எண்ணங்கள் இரத்தம்போல சிகப்பான ஈட்டிகள் வடிவமாயாவது, பளீரென்று ஜ்வாலைபோலவாவது இருக்கும். அநேகமாய் குரோதத்தின் கருத்த வளையங்களாலும் புகைபோன்ற மேகங்களாலும் சூழப்பட்டுமிருக்கும். குரோத எண்ணங்கள் எப்போதும் கருமை நிறமுள்ளவை.

பேராசை எண்ணங்கள் கூர்மையான துரட்டிகள் போலும் மிருகங்களின் விரிந்த கால் நகங்கள் போலும் இருக்கும். இவ்வுருவங்களையெல்லாம் பார்க்கக்கூடியவரென்று நமக்குத்தெரிந்த ஒருவர் நம்முடனிருந்தால், நாம் எவ்

வளவு ஜாக்கிரதையாயிருப்போம். நம்முடைய தலையிலி ருந்து நீண்டு வஸ்துக்களைக் கவருகின்ற பேராசை எண்ணங் களின் நகங்களைப் போன்ற உருவங்களையும், கோபத்தைக் காட்டுகிற சிவந்த ஈட்டிபோன்ற உருவங்களையும், சுயநயம் பாராட்டுகிற எண்ணங்களின் ஆபாஸமான புகைபோன்ற மேக உருவங்களையும், வேறொருவர் பார்க்கக் கூடுமென்று நமக்குத் தெரிந்தால் நம்மிற் சிலருக்கு எவ்வளவு அவமான மாயிருக்கும்? இவ்வுருவங்களைப் பார்க்கக்கூடிய சக்தி இப் போது அநேகர்களுக்கு உண்டாயிருக்கிறது.

ஒவ்வொரு மனிதன் அல்லது ஸ்திரீயின் சரீரத்தைச் சுற்றிலும் முட்டை வடிவமான பிரகாசமுள்ள மேகத்துக் கொப்பான ஒரு வஸ்து சூழ்ந்து கொண்டிருக்கிறது. அத ற்குப் பிரபை யென்று பேர். இது சரீரத்துக்கப்பால் 18 அங்குலம் வரை வியாபித்துக் கொண்டிருக்கும். விகாசமு றையில் மேம்பாடு அடைந்த ஜனங்களிடம் இந்தப் பிரபை யானது பிரகாசமாயும் அழகான வர்ணங்கள் அமைந்த தாயும் வரையறுக்கப்பட்ட உருவமுள்ளதாயு மிருக்கும். அவ்விதம் மேம்பாடு அடையாதவர்களுடைய பிரபையா னது மட்டிநிறமாயும், அழகற்றும், ஓரங்களில் ஒழுங் கற்றும், கொந்தளிப்புள்ள கனத்த கறுப்புநிறமுள்ளதா யுமிருக்கும்.

நாம் பலப்படுத்துகிற ஒவ்வொரு எண்ணமும் நம்மு டைய பிரபையில் ஒரு வகை உருவத்தை அல்லது வர்ணத் தால் ஆகியமேகத்தையுண்டு பண்ணுவதால் நாம் அடிக்கடி நினைக்கிற எண்ணங்கள் அதற்கு அநுகுணமான வர்ணத் தை அதில் பதிப்பிக்கும்.

அன்புள்ள ஜனங்களின் பிரபையில் ரோஜாவர்ணம் கலந்தவூதாவர்ணம் அதிகமாயும், பக்தியுள்ளவர்களிடத்தில் அதிக நீலவர்ணம் கலந்ததாயும், விவேகமுள்ளவர்களிடத் தில் மஞ்சளும் பச்சையும் கலந்ததாயுமிருக்கும்.

அனுதாபமானது அழகான வெளுத்த பச்சை நிறத்தைக்காட்டும். படபடப்புள்ள கோபமானது பச்சைத் தரையில் மேவாககுரும்பால் சிவந்த பொடிப்புள்ளிகளாகக் காட்டும்.

பயமானது ஆபாசமான மட்டிச்சாம்பல் நிறமுடையதாயும், எப்போதும் துடி துடிப்புள்ளதாயுமிருக்கும். ஜாஸ்தியாய் சுயநயம பாராட்டும தன்மையானது பழுபபு நிறமுள்ள வேலியால் அவனுடைய பிரபையை மூடிககொணடிருக்கும். அவன பழுப்பு நிறமுள்ள பெரிய பீப்பாய்க்குள அடைபட்டவன் போலிருபபான்.

லோபியானவனும் இந்தநிலைமையிலிருப்பான். வரவாக் கெட்டவனுக வளருவான. இதரர்களுடைய நல்ல எண்ணங்கள், அதாவது, பட்சம், அனபு, உதவி செய்யும் சுவபாவம், ஆகிய எண்ணங்கள் இந்தலோபியின் பிரபையை ஊடுருவிச் செல்லமாட்டா. அதனால இந்தபபரிதாபப்படத்தக்க லோபி வேறொருவரையும் நேசிககிறதில்லை. ஒரு ரப்பர் பந்தை கற்சுவற்றின் பேரில் எறிந்தால் அது எப்படித்திரும்பி வந்துவிடுமோ, அப்படியே மற்றவர்களுடைய நல்ல எண்ணங்கள் இவனிடததிற செல்லாமல் திரும்பி விடும். ஆகையால் இவன் தன்னை ஒருவரும் நேசிக்கிறதில்லை யென்று நினைக்கிறான்.

வி. வெங்குசாமி ஐயர்.

தனிகர்களாயிருக்கும் விவேகிகள் இவ்வரிய சிறு புத்தகங்களை ஏராளமாய் வாங்கி ஏன் பள்ளிப்பிள்ளைகளுக்கு இனுமாகக் கொடுக்கக்கூடாது?

1. விக்கிரஹாராதனை—படத்துடன் ரூ 0—1—0, 50-க்கு ரூ 2—4—0 100-க்கு ரூ 4—4—0
2. சர்வசமயத்தைப் பற்றியும் பகவான் கிருஷ்ணனைப்பற்றியும் ரூ 0—2—0, 25-க்கு ரூ 2—4—0, 50-க்கு ரூ 4—4—0.
3. குண்டதாரன் கதை ரூ 0—0—3, 50-க்கு ரூ 0—6—0, 100-க்கு ரூ 0—10—0, 200-க்கு ரூ 1—2—0,

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,

மதுரை.

ஓர் கதை.

விபச்சித்து உபாக்யானம்.

பூர்வகாலத்தில் சுமதி என்ற ஒரு பிராமணர் இருந்தார். அவர் பிருகு மஹரிஷியின் வம்சஸ்தர். மிகவும் தர்மவந்தராயும், வித்தியாவந்தராயும், ஸத்திய விரதமுடையவராயும், யோக அப்பியாஸியாயும் இருந்தமையால் இவருக்கு பூர்வஜன்ம விருத்தாந்தங்களை அறிந்து கொள்ள சக்தியுண்டாயிற்று. ஒரு நாள் இவர் தன் தகப்பனர் ஸமீபத்தில் உட்கார்ந்து தன்னுடைய பூர்வஜன்மங்களில் ஒரு ஜன்ம விருத்தாந்தத்தை விவரித்தார். அது என்னவெனில்:—

அந்த ஜன்மத்தில் ஒரு வைசியனுயிருந்தேன். என்னிடம் அநேக துர்க்குணங்கள் அமைந்து இருந்தன. எனது கெட்ட ஸ்வாபத்தாலே அநேகப் பிராணிகளை நிஷ்காரணமாக ஹிம்சித்துக்கொண்டிருந்தேன். என வீட்டிற்குச் சமீபத்தில் இருந்த ஒரு குளத்தின் அருகே போகும்பொழுதெல்லாம், எந்தப் பிராணியாகட்டும் ஜலம் குடிப்பதற்கு வந்தால், அதை ஜலம் சாப்பிடவொட்டாமல் விரட்டிக்கொண்டிருந்தேன். இவ்வித கெட்ட ஸ்வாபமிருந்தமையால் மரணத்திற்குப் பிறகு எனக்கு நரகம் லபித்தது. அந்த நரகஸ்திதியை விவரித்துச் சொல்லுகிறேன்.

துக்காந்தகாரமான அந்தப் பிரதேசம் ப்ரஜ்வலித்துக்கொண்டிருந்த அக்கினியால் பிரகாசிக்கச் செய்யப்பட்டிருந்தது. இந்த ஜ்வாலையின் காந்தியால் பார்க்கவே எவ்வித தைரிய சாலியின் மனமும் நீராகக்கூடிய கோரமான ரூபங்கள் புலப்பட்டுக் கொண்டிருந்தன. ஒரு பக்கம் தீக்ஷ்ண்யமான மூக்குகளை உடைய காக்கைகளும் கழுகுகளும் பாபிகளின் சரீரங்களைப் பிடுங்கித்தின்று கொண்டிருந்தன.

இன்னொரு இடத்தில் க்ரூர ரூபத்தையுடைய யமபடர்கள் பாபாதமாக்களை நிறுத்தி இரும்புக்கதைகளால் தலையின் மீது அடிக்க, இரத்தம் ப்ரவாஹமாகிப்பாய்ந்து ஒரு இடத்தில் மடுவாகத் தேங்கியிருந்தது. இவையெல்லாம் சாமான்ய சிக்ஷைகள். இவை இப்படி இருக்க இவைகளை விட அதிகக்கடுமையான க்ரூர உபத்திரவங்களை விவரிக்க அசாத்திய மாயிருந்தது.

இவ்வித கோரமான வேதனைகளை நான் அனுபவித்தேன். ஒரு நாள் யமபடர்கள் ஒரு பெரிய பாத்திரத்தில் கன்றுப் சுட்டமணலைப் போட்டு அதன் மத்தியில் என்னை நிறுத்தி வைத்து அப்பாத்திரத்தை மூடினார்கள். நானிவ்வித துர் அவஸ்தையால் பலமாய் ஓலமிடுகையில், திடீரென பரிமளயுக்தமான மலயமாருதம் வீசிற்று. இவ்வித மந்தமாருதம் வீசினவுடனே கருடனைப் பார்த்த ஸர்ப்ப ஸமூகத்தைப் போல பாபிகளுடைய துக்கங்களெல்லாம மாயமாய் மறைந்தன. எனக்குக் கூட நிர்திசயமான ஒரு ஆனந்தம் உண்டாயிற்று.

எல்லோரும் இவ்வித மாறுபாடுகள் எதனின்று உண்டாகி இருக்கும்வண்டு மென்பதாக ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தேஜோரூபனும் ஆஜாநுபாகுவுமான ஒரு மஹா புருஷன யமபடனோடு சமீபித்தில வந்து கொண்டிருப்பதாகத் தென்பட்டது. இந்த மஹா புருஷன் தன்னைச் சுற்றிலும் ஜனங்கள் முறையிடுவதைப் பார்ததுத் தன்னுடன் கூட வந்து கொண்டிருந்த தூதனைப்பார்த்து பின் வருமாறு சொனனர்.

ஹே, யமபடா! நான் ராஜரிஷியான ஜனக மஹாராஜா வம்சத்தில உறபவித்த விப்சிதது மஹாராஜன். நான் பூலோகத்தில் ராஜ்யமாளும் வரைக்கும் பிரஜைகளை தர்மத்தோடும் புத்திர வாஞ்சையோடும் பரிபாலித்து வந்

தேன். ராஜாக்களுக்கு யோக்கியமான அனேக யஜ்ஞங்களை சரியான விதிப்படி அனுஷ்டித்தேன். க்ஷத்திரிய தர்மத்தை அனுசரித்து யுத்தகளத்தில நின்று யுத்தம் செய்து சத்துருக்களை விரட்டினேனே ஒழியப் பின்வாங்கவில்லை. என் வீட்டு வாசலுக்கு வந்த அதிதி முதலானோர்களை உபசரித்தேனே ஒழிய விரட்டி அடிக்கவில்லை. குருமார்களிடத்தும் பெரியோர்களிடத்தும் பக்தி வினயங்களோடு நடந்து கொண்டேன். பிறர் ஸொத்தை ஒருபொழுதும் அபேக்ஷிக்கவில்லை. இப்படியிருந்த என்னை இவ்வித துக்கமயமான ஸ்தலத்திற்கு ஏன் இட்டுவந்தாய்? என்று கேட்டார்.

அதற்கு யமதூதன் ஹேராஜாவே! நீர் செய்தவேதோ ஒரு அற்பமான தோஷபலனுக்காக இந்த நரக தரிசனம் உண்டாகக் கூடியதாயிருந்தது. இத்தோடு அந்த தோஷ பலன் முடிந்தது. இனி வைகுண்டத்தில் நிரதிசயமான சாசுவத ஆனந்தத்தை அனுபவிக்கத் திரும்பவாருமென்றான். ராஜாவும் வைகுண்டத்திற்குப் போகத் தயாராக இருந்தார். இவ்வித நிலையில் பாபிகள் எல்லோரும் கூட்டம் கூடி ஏகவாக்கியத்துடன் ஹே மஹாராஜனே! தயை செய்து இன்னம் சிறிது நேரம் இங்கேயே இருங்கள். உங்கள் சரீர சம்மந்தத்தினின்று வீசிக் கொண்டிருக்கும் மந்த மாருதமானது எங்கள் எல்லோருக்கும் அமிர்த ப்ராயமாக இருக்கிறது. உமது ஸன்னதி மஹிமையால் நாங்கள் எவரும் எதிர்பாராதபடி இந்த கஷ்டங்கள் நிவர்த்தியாகி யிருக்கின்றன, என்று ஏகோபித்து முறையிடும் தொனியை ராஜா கேட்டார். எவ்வளவு கல் நெஞ்சானாலும் கரைக்கக் கூடிய இந்த அழுகை சப்தத்தைக் கேட்டவுடனே கருணாபூரணனை அந்த ராஜா யமபடனைப் பார்த்து பின் வருமாறு சொன்னார்.—ஹே காலகிங்கரனே! நான் பின்னுக்குத் திரும்பியதைப் பார்த்து இவர்களெல்லோரும் ஏனிவ்விதம் துக்கப்படுகிறார்கள்? நான் இவ்

விடமிருப்பதால் இவர்களுக்கு எவ்விதம் உபகாரமாகும்? என்று கேட்டார்.

யமபடன்:—பகவத் பிரீதியாக தேவர்களையும் பிதுருக்களையும் அதிதியாக வந்தவர்களையும் தாஸர்களையும் திருப்தி செய்வித்த பின்னர், மிச்சமான அன்னத்தால் இந்த சரீரத்தை வளர்த்தீர். இவ்வித சுகிர்தமான தேஹ ஸம்பந்தமாத்திரத்தாலே இவ்விதக் காற்றிற்கு அனுகூலம் உண்டாயிருக்கிறது. இன்னும் இங்கு ஏன் தாமதிக்க வேண்டும்? எழுந்திரும். வைகுண்டத்திற்குச் செல்வோம் என்று தூதன் சொன்னான்

ராஜா:—கஷ்டப் படுகிறவர்களுக்கும் துக்கத்தால் பிடிக்கப்பட்டவர்களுக்கும் மனச்சமாதானத்தைச் செய்து அவர்களுக்கு ஹிதத்தைக் கொடுக்கும் மஹாபுருஷனுக்கு அந்தரங்கத்தில் ஜனிக்கும் ஆனந்தம் கரையற்றது. அதற்குத் தேவலோக பிரம்மலோக ஆனந்தங்கள் கூட சரியாகாது; நானிவ்விடம் இருப்பதால் இவ்வளவு ஜீவர்களுக்கு உபகாரமாயிருக்குமே யாமாகில் நானிவ்விடமே சாசுவதமாக இருக்க விரும்புகின்றேன். ஸ்வர்க்க போகம் எதையும நான் விரும்பேன்.

யமபடன்:—ஹே ராஜனே, நீர் செய்த தர்ம கார்யங்களினின்று அபாரமான புண்ணிய ராசியை அடையப் பெற்றீர். இவ்விதம் நீர் பாபிகளின் மத்தியிலிருக்க ஏன் இச்சிக்கிறீர்? அவர்கள் தாங்கள் செய்த துஷ்டகார்யங்களுக்குத்தக்க சிக்ஷையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்களை விட்டொழித்து என்னைத் தொடர்ந்து ஸ்வர்க்கத்திற்கு வாரும். வைகுண்டத்தில் ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனுடைய ஸன்னதியில் மாசில்லாத சாசுவதமான சாந்தி சுகங்களை அனுபவிப்பீர்!

ராஜா:—ஐயோ, இந்த ஏழை ஜீவர்கள் எவ்வளவு துக்கங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்! இப்படிப் பட்

டவர்களை விட்டு நான் எப்படி வருவேன்? நானிவ்விட மிருப்பதால் இவ்வித கோரமான ஸ்தலத்திலும் இவ்வளவு ஆனந்தம் உண்டாயிற்றல்லவா? அபாயத்திற்குள் சிக்கிக் கஷ்டப்பட்டு வரும் சத்துருவுக்குக் கூட கருணை காட்டல் தர்மம். இவ்விதம் செய்யாத பாபியின் உயிரை எரித்தாலென்ன? எந்த மனிதரில் அதமன் துக்கத்தினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு உபகாரம் செய்யானோ அவ்வித பாபி செய்த தானதர்மங்களும், தபஸும் நிஷ்பலமாய் ஆகாதா? ஆகையால் என்தேகத்தை இந்த அக்கினி ஜ்வாலையில் தஹித்து இவ்விடம் பசிதாகாதிகளை அனுபவிப்பதால் இந்த ஜீவர்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க ஸாத்தியமாயின் நான்சந்தோஷத்துடன் இவ்விடமே இருக்கிறேன். நீ செல், நான் எப்பொழுதும் வரமாட்டேன்.

இவ்விதம் பிடிவாதத்தைக் கொண்ட மஹாராஜாவை அவ்விடமிருந்து ஸ்வர்க்கத்திற்குத் திருப்புவதற்காக யமதர்ம ராஜனும் இந்திரனும் வந்தார்கள்.

ராஜா:—ஓ யமதர்மராஜனே நான் எவ்வளவு புண்யம் ஸம்பாதித்திருக்கிறேனென்பதைச் சொல்லும்.

யமதர்மராஜா:—சமுத்திரத்திலுள்ள ஜலத்துளிகளையும் ஆகாசத்திலுள்ள நட்சத்திரங்களையும் சமுத்திரத்தின் கரையிலுள்ள மணல்களையும் எண்ண எவ்விதம் ஸாத்யமாகாதோ அவ்விதமே நீர் சம்பாதித்த புண்யத்தைக் கணக்கிட சாத்தியமன்று. இந்த தினம் நரகவாசிகளிடம் காட்டிய கருணை ரஸத்தால் உமது புண்யம் நூறு மடங்கு அதிகமாகிவிட்டது. எங்களுடன் வாரும், பிர்மா திலோகங்களில் அபரிமிதமான போகங்களையும் அனுபவிப்பீர்.

ராஜா:—ஹே மஹான்களே, எனது இருப்பை அபேக்ஷிக்கும் இந்த ஜீவர்களை நான் இங்கு விட்டுவரின் எனது சகவாசத்தை எவர்கள் அபேக்ஷிப்பார்கள்? ஆகையால் நான் சம்பாதித்த புண்யமெல்லாம் இவர்களுடைய கஷ்ட

நிவர்த்திக்காக தாரை வார்த்திருக்கிறேன். இவர்களுடைய துக்கங்களெல்லாம் ஒழிந்து சுகமாயிருக்கட்டுமென்றார்.

ராஜாவினுடைய வாயினின்று இந்த வார்த்தை வெளிப்பட்டவுடனே தேவர்கள் புஷ்ப மழையை வருஷித்தார்கள். அந்தப் பாபிகள் எல்லோருக்கும் நரகவேதனைகள் ஒழிந்தன. முடிவில் விபசித்து மஹாராஜா வைகுண்டத்திற்குச் சென்றார்.

ஜங்கம்கோடி சீனிவாஸராவ்.

1918-ம் ஞு மார்ச்சிமீ த்திய தெலுங்கு திவ்யஞான தீபிகைப் பத்திரிகையினின்று எனங்குடி வி. இராமசந்திரநாயுடுவால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

சமாசாரம்.

ஸ்ரீமதி அன்னபஸந்தி சங்கம்—பங்களூர்.

21வது வருடத்திய அறிக்கையைப் பார்வையிட்டோம் 20வது வருட அறிக்கையை சென்ற வருஷத்தில் இப்பத்திரிகையில் விஸ்தாரமாய் பார்வையிடலானோம். 1918ஆம் வருஷத்து அறிக்கையினின்று இச்சங்மானது தன்னுடைய ஒவ்வொரு நோக்கத்தையும் நன்கு நிறைவேற்றிவருகின்றது என்று அறியச்சந்தோஷமடைகிறோம். மதக்கல்வி, தமிழ்ப்பயிற்சி, வித்வத் பிரசங்கம், அன்னதானம், வஸ்திரதானம், இதர தர்மம, வாசகசாலை புதககசாலை ஆதிய அநேக தர்மங்களை நன்றாய் நடத்திவருகிறார்கள் என்பது யாவரும் போற்றத்தகுந்த விஷயமாகும். இச்சங்கம் நீடுழிவாழ்க.

'கோபால கிருஷ்ண கோகலே'

மனிதனுடைய புத்திக்கும் சக்திக்கும் குணத்துக்கும் அளவு நிச்சயிப்பதென்றால் யாரால் முடியும்? சிலருடைய புத்தி, சாமர்த்தியங்கள் நம்மை உத்ஸாகிக்கச் செய்கின்றன. சிலருடைய தைரியமும உத்ஸாகமும் நமக்குள் ஆச்சரியத்தை உண்டாக்குகின்றன. இன்னும் சிலருடைய இருதய சுத்தியும் பரோபகார சிந்தையும் பார்த்தமாத்திரம் நமக்கு அவர்களிடத்தில் பக்தியை உண்டாக்குகின்றன. இம்மாதிரி மஹா புருஷர்களுடைய ஜனனம் லோகத்திலே அபூர்வமானதாக விருக்கின்றது. ஒவ்வொரு காலத்திலே ஒவ்வொருவர் அவதாரம் செய்து ஜனசமூகத்துக்கு அவசியமான அரிய பெரிய காரியங்களைச் செய்து விட்டு மறைகின்றனர்.

பிரகிருதி இந்த மாதிரி உத்தம புருஷர்களை லோகத்திலே அனுப்புவது மிகவும அபூர்வம் போலத்தோன்றுகிறது. "தாமம நசிதது அதர்மம மேலிடுகிற சமயத்திலே நான மனுஷ உருவத்தோடு பிறந்து மறுபடி தர்மத்தை நிலை நிறுத்துகிறேன" என்று பகவான் சொல்லி யிருக்கிறாரல்லவா? இப்படி பல அவசியங்களை முன்னிட்டு பகவான் அவ்வப்போது அவதரித்து லோகத்துக்கு நன்மையைச் செய்கிறார் என்பது ஹிந்துக்களுடைய நம்பிக்கை. இதுபோல ஒவ்வொரு தேசசரித்திரததிலும் ஒவ்வொரு காலத்தில் ஓரொருத்தர் தங்களுடைய ஸஹஜீவிகளைக்காட்டிலும், செடிகளின் மத்தியில் ஒரு விருக்ஷம் வளர்ந்து நிற்பதுபோல, உயர்ந்து விளங்குகின்றார்கள். இவர்களிடத்திலே ஈசுவராம்சம் அதிகரித்துக்காணுவதாலே, நாம் அவர்களைப் பூசிக்கிறோம். இவர்கள் தாம் எடுதத காரியததில் சற்றும் பின்வாங்குவதே இல்லை. ஒரு உத்தேசம், ஒரு காரியம், ஒரு வழி. இம்மாதிரி அபூர்வ குணங்களைப் படைத்த ஒரு சிலருடைய கூட்டத்திலே உன்னதமான

ஒரு ஸ்தானத்தை வகிப்பவராகும் நம்முடைய கோபால கிருஷ்ண கோகலே. தன்னுடைய சொத்து, சுகம், கீர்த்தி, பதவி முதலியனவெல்லாம் தன்னுடைய தாய்நாட்டுக்காக அர்ப்பணம் செய்து, எவ்வித அபஜயங்கள் நேரிட்டாலும் பொருட்படுத்தாமல், தேசபக்தி எள்ளளவும் குறையாது, மற்றவர்களுடைய ஹிருதயங்களிலும் அந்த பக்தியை உண்டாக்கும் பொருட்டு, மனம், வாக்கு, காயங்களாலே அவர் செய்து காட்டின மாதிரி வேறொருவரும் செய்திருக்கமாட்டார்கள.

இராஜதந்திரத்திலுள்ள நிபுணத்துவமும், லௌகிக ஞானமும், நிர்மலமான அவருடைய வாழ்க்கையும், சாந்த ஸ்வபாவமும, பிறருக்கு அவரிடத்திலே யாதொரு சந்தேகமும் யோசிப்புமின்றி பக்தியை உண்டாகச் செய்கின்றன. கோகலே இறந்து போனதானது, பரதகண்டத்தில் ஒரு உத்தம சந்தானம் நஷ்டமானதுமன்றி, லோகத்திலேயே ஒரு மஹா புருஷன் நஷ்டமாய் விட்டாரென்று அவரைக் கண்டோரும் கேட்டோருமான சகலஜனங்களும் விசனப்பட்டார்கள். கோகலே பெரிய பணக்காரரல்ல. பெரிய உத்தியோகஸ்தரும் அல்ல. பெரிய ஒரு ராஜாவல்ல. நம் எல்லோரைபம்போல அவரும் ஒரு சாதாரண மனிதரே. எந்தப்பணக்காரனும்லே ஜனங்களுடைய இந்தத் திருப்தியைச் சம்பாதிக்கமுடியும? எந்த உததியோகஸ்தனை ஜனங்கள் இவ்வளவு அபிமானிப்பார்கள்? எந்த ராஜாவைஜனங்கள இப்படிக் கொண்டாடுவர்? ராம, கிருஷ்ணர்களுடைய சரித்திரங்களைக்கேட்டு, உண்டாகும் உற்சாகமன்றோ கோகலேயினுடைய சரித்ரததைப்படித்த மாத்திரம் நமக்கு உண்டாகிறது! இந்த மஹா புருஷன் யார்? என்னென்ன காரியங்களைச் செய்தார்? எதனாலே, ஜனங்கள் இவரை இவ்வளவு தூரம் கொண்டாடி வருகிறார்கள்? இவருடைய சரித்திரத்திலே உள்ள மஹாத்மியம் என்ன?

பாரதகண்டத்தினுடைய நீண்டசரித்திரத்திலே மஹாராஷ்டர தேசம் ஒரு முக்கிய ஸ்தானமாக இருப்பதை நாம் தெளிவாகக் காணுகிறோம். கூர்மையான அறிவும், அபரிமிதமான தேசாபிமானமும், அளவற்ற தைரியமும் மஹாராஷ்டிரர்க்கு சஹஜமான குணங்கள். ஈடு மெடுப்புமில்லாத பண்டிதர்களென்ன, ரணரங்க சூரர்களான யுத்த வீரர்களென்ன, பக்திமான்களென்ன, இவர்களுடைய பிறப்பாலே மஹாராஷ்டிர தேசம் புனிதமாக்கப் பட்டுள்ளது. ஞானப் பொக்கிஷமான ராமதாஸ் பிறந்து தத்துவஞானோபதேசம் செய்ததும், தன் சொந்த தேசத்தின் சுவாதந்தர்யத்தைப் பெறவும், சநாதன தர்மத்தை நிலை நிறுத்தவும் உற்சாகத்தோடு அரிய பெரிய காரியங்களைச் செய்த சிவாஜி பிறந்ததும் இத்தேசமன்றோ? தீரத்தோடும், குடிகளிடத்திலே மிகுந்த அபிமானத்தோடும், ஈசுவர விசுவாசத்தோடும் சிவாஜி அரசு செய்ததும் இத்தேசமல்லவா? சமீபகாலத்திலுங்கூட மஹா புருஷர்கள் சிலர் இங்கு அவதரித்து அருமையும் பெருமையும் வாய்ந்த காரியங்களைச் சாதித்திருக்கின்றனர்.

மஹா மேதாவிகளான, மஹாதேவ கோவிந்த ரானடே, பால கங்காதர திலகர், இவர்களுடைய பிறப்பிடமும் இந்த மஹாராட்டிர தேசமேயாகும். இம்மாதிரி சரித்திரப் பிரசித்தமான புண்ணிய பூமியிலே ரத்தினகிரி ஜில்லாவில் கோலாப்பூர் என்ற ஊரிலே, 1866-ம் வருஷத்திலே மஹான் கோகலே ஜனனமானார்.

அவருடைய தாய் தகப்பன்மார் மிகவும் ஏழைகள். தங்களுடைய மகனைச் சிரமமில்லாமல் படிப்பிக்கப்போதுமான பணமோ, வேறு எந்த விதமான சௌகரியமோ அவருக்கு இல்லை. ஆனால், புத்தி சாலித்தனமும், நிலையான உத்ஸாகமும் உள்ள அந்த அருமை மகனுடைய படிப்புக்குத் தரித்திரம் ஒரு தடையாவது உண்டோ? இல்லை. இல்லை,

இவருடைய பன்னிரண்டாம் பிராயத்திலேயே தகப்பன இறந்துபோனார். இவரைப்படிப்பிக்கும் பொறுப்பு அண்ணனைச் சேர்ந்தது. சொந்த ஊரிலே உள்ள ஒரு கலா சாலையில் படித்து எப். ஏ. பரீக்ஷையில் தேறினார். படிப்பில் மற்ற பிள்ளைகளைப் போலவே இருந்தாலும் அவருக்கு அவர்களை விட அதிக ஞாபக சக்தி இருந்தது. பின்பு, பொம்பாய் எல்பின்ஸ்டன் கலாசாலையிலும், டக்கான கலாசாலையிலும் படித்து 1884ம் வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் தேறினார். படிப்பு முடிந்ததும் இஞ்சினீயர் ஆக வேண்டுமென்றும், வக்கீலாகப் போவதென்றும் முயன்று, அவைகளில் மனம் செல்லாமல், கடைசியாக புனாவில் சுதேசிகளாலே தேசத்தின் படிப்பை விருத்தி செய்யும் நோககத்தோடு ஏற்படுத்தியுள்ள தக்ஷிணவித்யாப்யாஸ சங்கத்தில் ஒரு உபாத்யாயராக அமர்ந்தார.

(தொடரும)

வி. ரத்னம்.

புத்தக விமர்சம்

பாலபோதினி—தேவநாகரீ,. ஹிந்தி வர்ணமாலா. ஹிந்திஸ்கூல் உபாத்தியாயர் எம். ஜே. ஷர்மா அவர்கள் மதுரையில் தர்மத்துக்காக ஹிந்திபாஷையைக் கற்பிக்க ஒரு தர்மப்பள்ளிக்கூடம் வைத்திருக்கிறார். அவர் 12 பக்கங்களடங்கிய பாலபோதினியை அச்சிட்டிருக்கிறார். இதன் விலை அணு 1. அடுத்த புஸ்தகங்களும் கூடிய சீக்கிரம் வெளிவரும் என்று கூறுகிறார். ஹிந்தி பாஷையைக்கற்க வேண்டுமென்ற ஆவாவானது இக்காலத்தில் தமிழ் நாட்டில் உண்டாயிருக்கின்றது. ஆகையால் ஹிந்திபாஷையைக கற்பிக்கக் கூடிய புஸதகங்கள் அவசியம் என்று கூறுதல் மிகையாகும. அடுத்த புஸ்தகங்களை அச்சிடும் முன் தமிழ்வாசகங்களைத் தமிழ் அறிந்தவரைகொண்டு பிழையறத்திருத்தும் படிக்கும் அச்சுப்பிழையின்றி அச்சடிக்கும் படிக்கும ஆசிரியர் முயல்வார் என்று நம்புகிறோம். ஆசிரியரது நன்முயற்சி யானது யாவரும் கொண்டாடத்தகுந்தது. அவருடைய நன்முயற்சியால் தமிழ் நாட்டில், முக்கியமாய் மதுரையில், ஹிந்தி பாஷையின் அறிவானது பரவும் என்று நம்புகிறோம்.

பொறாமை

என் அருமை ஸஹோதரிகளே! நான் இந்த மாதிரிப் பெருஞ்சபைகளில் முன் ஒரு போதும் பேசியதில்லை. அன்றியும் அவ்வளவு ஸாமர்த்தியசாலியுமில்லை. ஆனால் என் மனவேண்டுகோளை நிறைவேற்ற வேண்டுமென்றும், நீங்கள் எனக்கு கொடுத்திருக்கும் பெரும் பாக்கியத்தைக் குற்றம் குறையின்றி அடையவேண்டுமென்றும் அதிக ஆசையுடன், "ஆசை வெட்கம் அறியாது" என்ற பழமொழிப்படி பேசத்துணிந்தேன். நான் சொல்லும் வாக்கியங்களில் குற்றங்கள் இருந்தாலும் அவைகளை விலக்கி சாரத்தை மாத்திரம் எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. நான் ஒரு ஸ்திரீயாய் இருந்தபோதிலும், பொறாமை என்ற துர்க்குணமானது பெண்களுக்கே ஒரு முக்கிய தூஷணமாயிருப்பதை மறுக்க முடியாதவளாயிருக்கிறேன்.

2. பொறாமையானது இஹபரம் இரண்டையும் கெடுக்கிற கொடியவிஷம். உலகத்தில் நாம் அனைவரும் ஸஹோதரிகளாயிருந்து பிறரைப்பார்த்து அசூயைப்படாமல் ஸுகமாய் பொறுமையுடன் வாழவேண்டும். பொறாமைக்கு மூலகாரணம் யாதெனில், அனைவரையும் பிடித்திருக்கும் பணப்பேய்தான். ஒருவருக்கு, பணத்தாசை பிடித்து விட்டால் முன் பின் யோசியாது அதே ஏக்கமாய் எத்தொழிலையும் செய்யத்துணிந்து விடுவார். அதனால் பொய், களவு, கெட்ட நடத்தை முதலிய துன்மார்க்கங்கள் ஏற்படுவதுடன், வீட்டிலும் சுகத்துடன் குடித்தனம் செய்வதும் அன்றோடு விலகிவிடும். எப்படியெனில், தன் புருஷனை நகை வேண்டும் காணயம்வேண்டும் என்று புண்படுத்துவதும் வயிற்றிற்கு கூட நன்றாய் சாப்பிடாமல்

கொண்ட புருஷனை வஞ்சகமும் துரோகமும் செய்து சிறுவாடுவிற்று பணம் சேர்ப்பதிலேயே நோக்கமாயிருப் பதே குடி கொள்ளும். பொறாமை ஏற்பட்டுவிட்டால் பிறர் வாழ ஸகியாமல் ஒருவருக்கொருவர் விரோதமுண் டாக்கிக் கொள்ளுவதே தொழிலாகும்.

3. அப்படி இருந்து வருவதில் ஏதோ கொஞ்ச நாள்வரை மட்டும்தான் பிறருக்குத் தன்னுடைய மனதின் அக்ராங்கம் தெரியாமல் கொண்டு செலுத்த முடியும். பிறகு என்ன முயன்றாலும், இவளுடைய துரெண்ணம் வெளியாகிவிடும். அப்பொழுது மற்றெல்லோரும் ஒன்று கூடி இவளை நிந்தித்துக் தள்ளிவிடுவார்கள். அப்பொழு து இவள் மனது என்ன பாடுபடும்? இவள் மனதுக்கு என்றைக்கும் துன்பமும் வேதனையுமே யொழிய இன்பமும் ஸுகமும் கிடையாது.

4 பொதுவாய் ஒருவள் தன்னுடைய நன்மையை மாத்திரம் ஸம்பாதித்துக் கொண்டால் அவள் ஒரு நாளும் சந்தோஷமே அடைய மாட்டாள். மற்றவர்களுடைய ஸுக துக்கங்களையும் பாவித்தால் மாத்திரமே தானும் ஸுகம் அடையலாம். ஆனால் பிறர் சுகித்திருப்பதைக் கண்டு சகியாமல் தன் மனதை அசூயையால் வாட்டிக் கொண்டிருக்கும் பக்ஷத்தில், அப்பேர்ப்பட்டவளுடன் நெருங்கிப் பழகுகிறவர்கள் இவளுக்கு யேதேனும் தீங்கு செய்வார்களே யன்றி, ஒரு விதமான ஸகாயமும் செய்ய மாட்டார்கள்.

5. ஆனால், ஸஹோதரிகளே, ஒரு விஷயத்தில் மாத் திரம் பிறரைப் பார்த்து நாம் பொறாமைப் படவேண்டும். ஆனாலோ அப்பொறாமைப் படுவதோடு நின்று விடாமல், நாமும் கஷ்டப்பட்டு அவர்கள் ஸ்திதியை அடைய முய லவேண்டும். அது வென்ன வென்றால், பிறருடைய புத் தியையும், கல்விப் பயிற்சியையும், ஸாமர்த்தியத்தையும்

பார்த்துத் தான் பொறாமை அடைய வேண்டும். அப்படிப் பொறாமைப்பட்டு மனதை மாத்திரம் புண்படுத்திக் கொண்டிராமல் பொறாமையுடன் தன்னைத்தானே திருத்திக் கொள்ள முயல வேண்டியது.

6. அசூயையுள்ளவர்கள் வயிற்றுவலியை விலைக்கு வாங்கினது போலவும், கொள்ளித் தேளை மடியில் கட்டிக் கொண்டது போலவும், என்னாளும் உபத்திரவத்திற்கும் மனச் சஞ்சலத்திற்கும் பாத்திரர்களாகிறார்களே யொழிய எக்காலத்திலும் ஸுகமென்பது அவர்களுக்குக் கிஞ்சித்தேனும் ஏற்படமாட்டாது. அவர்களுக்கு ஒரு நிமிஷமாகிலும் ஆறுதலுக்கிடமில்லை. நாம் அன்னியர் மேல் பிரயோகிக்கும் குண்டுகள் சில சமயங்களில் நம்மேலேயே பாய்ந்து நம்மை தொலைப்பது போல், பிறர் மேல்படும் பொறாமை நம்மைத் தானே வருத்துகின்றது. பொறாமைக்காரருக்கு கேடுவிளைவிக்க அதுவேபோதும், வேறு பகை வேண்டாம். கல்விமான்களையும், புத்திசாலிகளையும், செல்வர்களையும், பெரியோர்களையும், பார்த்து நாமும் அவர்களைப் போல் ஆகவேண்டுமென்று பிரயாசைப் படுவது உத்தமந்தான். ஆனால் அவ்விதம் பிரயாசைப் படாது அவர்களைப் பார்த்துப் பார்த்து அசூயைப்பட்டுக் கொண்டிருந்தால், நம்மனது வேகின்றதே யன்றி வேறே பயனில்லை.

7. உலகத்தில் கடவுளால் அமைக்கப்பெற்ற நாமனைவர்களும் ஸகோதரர்களும் ஸகோதரிகளும் ஆவோம். அந்த யெண்ண மிருப்பகினால், யெல்லாரும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்றும் ஒருவரும் துன்பப் படக்கூடாதென்றும் விரும்ப வேண்டியது நம்முடைய கடமையாகும். அதற்கு விரோதமாக, தான் ஒரு பிராணி மட்டும் க்ஷேமமாய் இருக்கவேண்டுமென்றும் மற்றவர்கள் கெட்டுப் போக வேண்டுமென்றும் நினைக்கும்படி செய்கிற பொறாமையைப் போல துர்க்குணம் வேறொன்றுமில்லை.

8. ஆசையால் தர்மவழிச் செல்லாது பாப வினைகளைச் செய்து இம்மை மறுமை யிரண்டிலும் ஸுகமின்றி, கொடுமையான நரகத்திற்குள்ளாக வேண்டுமென்கிறவர்கள் பொறுமையைக் கைக்கொள்க. இப் பொறுமையானது ஸந்ததி ஸந்ததியாக வரும் கெட்ட குணமாகையால், ஆசை இன்றோடு வேர் றாத்து விட்டால், செல்வமும், தேக ஸௌக்கியமும், குடும்ப விஷடங்களும் நன்றாக நடேறும். ஆகையால், என்னுடைய ஸகோதரிகளே இன்றொடு இந்த துர்க்குணத்தை நாமெல்லொரும் விட்டு விடுவோமாக. அவ்விதமே நடந்து கொள்ள மனோதிடமும் ஔத்தாசையும் நமக்குக் கொடுக்க வேண்டுமென்றும், நாமெல்லோரும் ஒற்றுமையுடன் சகோதர பாவத்தை முன்னிட்டுக்கொண்டு நம் கடமையை ஒழுங்கு தவறாது செய்யச் சக்தியும் கொடுக்க வேண்டுமென்றும் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

சீதாலக்ஷ்மி அம்மாள்.

மகா பாரதமும் மர முதலிய ஸ்தாவரங்களும்.

ஸர் ஜகதீசசந்திர வஸுவானவர் ஆச்சரியதகால் அண்ணாந்து பார்க்கும் மேல் நாட்டு விற்பன்னருக்கு நிரூபித்துக் காட்டிய தத்துவங்கள் நம் நாட்டில் முற்காலத்திலேயே அறியப்பட்டிருந்தன வென்பதை அவரே கூறியிருக்கிறார். அங்கப்படியே மகாபாரதத்தில் புற் பூண்டு முதலிய ஸ்தாவரங்களுக்கும் மனிதனுக்கும் உள்ள ஸாம்யங்களை கூறியிருக்கிறது. அதை நேயர்கள் அறிந்தானந்திப்பார்கள் என்று நம்புகிறோம்.

பாரத்துவாஜர்:— இவ்வுலகங்கள் எந்தப் பூதங்களால் வியாபிக்கப்பட்டிருக்கின்றனவோ, எவைகள் மகா பூதங்களென்று பெயருள்ளவைகளோ, எவைகளை முன் காலத்தில் பிரஹ்மதேவர் உண்டு பண்ணினரோ, அந்தப் பூதங்கள் ஐந்தென்று சொல்லப்படுகின்றன. பெரிய புத்தியுள்ள அந்த பிரஹ்மதேவர் பல்லாயிரம் பிராணிகளைப் படைத்திருக்கும் பொழுது ஐந்து பூதங்கள் என்பது எவ்விதம் பொருத்தமுள்ளதாகும்? என்று கேட்டார். பிருகு சொல்லுகிறார்:— மகத்தென்னும் பதம் கணக்கில்லாதவைகளைச் சொல்லும். பூதம என்ற பதததிற்கு பிறப்படைந்தவைகள் என்று பொருள்படும். அக்காரணத்தால் மகா பூதம் என்ற இப்பதம் அவைகளுக்குப் பொருத்த முள்ளதாகும். பிராணிகளின் சரீரம் ஐந்து பூதங்களால் உண்டுபண்ணப்பட்டதாகின்றது. இச்சரீரத்திலுள்ள சேஷ்டையானது வாயுவும், இடைவெளியானது ஆகாயமும, சூடானது அக்கினியும், திரவமானது ஜலமும் கடினமானது பூமியுமாகின்றன. இவ்விதம் ஸ்தாவர ஜங்கமங்கள் எல்லாம் இவ்வைந்து பூதங்களுடன் கூடியவையாயிருக்கின்றன. இந்திரியங்களெனப் பெயர் வாய்ந்தவைகளான செவியும், மூக்கும், நாக்கும், துவக்கும், கண்ணும், ஐந்து பூதங்களைச் சேர்ந்தவைகள் தாம் என்று சொன்னார். பாரத்துவாஜர்:-ஸ்தாவரங்களும் ஜங்கமங்களும் ஐந்து பூதங்களுடன் கூடியவைகள் என்றால, ஸ்தாவரங்களின் சரீரத்தில் ஐந்து பூதங்கள் காணப்படவில்லையே? உண்மையில் சூடும் சேஷ்டையும இல்லாதவைகளும் கடினமுமான மரங்களின் சரீரததில் ஐந்து பூதங்களும் காணப்படவில்லையே? அவைகள் கேட்பதில்லை, பார்க்கிறதுமில்லை, மணத்தையும ரசத்தையும் அறிகிறதுமில்லை, ஸபர்சத்தை அறிகிறதில்லை. ஆகையால அவைகள எவ்விதம் ஐந்து பூதங்களுடனும கூடியவைகளாகும்? திரவமும், சூடும், பூமியும், வாயுவுமில்லாததாலும் ஆகாயம் அவைகளில் காணப்படாததாலும மரங்களுக்கு பஞ்சபூதங்களின் சேர்க்கையில்லையே.

பிருகு சொல்லத் தொடங்கினார். கெட்டியாயிருந்தாலும் மரங்களுக்கு ஆகாயமிருக்கிறது. ஸந்தேஹமில்லை. (அக்காரணம் பற்றியே) அம்மரங்களுக்கு எப்போதும் பூவும் கனியும் வெளிப்படுவது பொருத்தமுள்ளதாயிருக்கிறது. உஷ்ணத்தால் நிறமும் வாடுகிறது. பட்டையும் கனியும் பூவும் வாடுகிறதும் உதிர்கிறதுமாயிருக்கின்றன. ஆகையால் இம்மரங்களுக்கு ஸ்பர்சமிருக்கின்றது. காற்று, அக்கினி, இவைகளின் அதிர்ச்சிகளால் கனியும், பூவும், உதிர்கின்றன. ஒலியானது செவியாலன்றோ கிரகிக்கப்படும்? ஆகையால் மரங்கள் செவியுள்ளவைகளாயிருக்கின்றன. கொடியானது மரத்தைச் சுற்றிக்கொள்ளுகிறது. கண்ணில்லாதவனுக்கு வழிகாணப்படுகிறதில்லையே? ஆகையால் மரங்கள் கண்ணுள்ளவைகளாயிருக்கின்றன. அவ்விதம் சுத்தமும் அசுத்தமான பலவித மணங்களாலும் தூபங்களாலும், மரங்கள் நோயிலலாதுவைளும் பூக்களுள்ளவைகளுமாகின்றன. ஆகையால மரங்கள் மூக்குள்ளவைகளாயிருக்கின்றன. வேர்களால் தண்ணீரைக் குடிப்பதாலும் வியாதிகள் காணப்படுவதாலும் வியாதிகளுக்குச் சிகித்ஸையிருப்பதாலும் மரங்களுக்கு நாவிருக்கிறது. மனிதன் தாமரைத் தண்டை வாயில் வைத்து நீரை உயர இழுப்பதுபோல மரமானது காற்றுடன் கூடியதாகி வேர்களால நீரைக் குடிக்கிறது. சுகதுக்கங்களை அறிவதாலும் வெட்டுப்பட்டது தளிர்ப்பதாலும் மரங்களுக்குள்ள ஜீவனை அறிகிறேன். அவைகளுக்கு அறிவு இல்லை யென்பது இல்லை. அந்த மரத்தால் குடிக்கப்படும் அந்த நீரைக் காற்றும் அக்கினியும் ஜீர்ணமாகும்படி செய்கின்றன. ஆகாரம் ஜீரணமாகும் காரணத்தால் மரங்களுக்கு ஸ்நேஹமும் வளர்ச்சியு முண்டாகின்றன.

(மகாபாரதம் சாந்திபர்வம் 182வது அத்தியாயம்.)

வைத்யரத்ன பண்டிட் டி. கோபாலா சார்லு அவர்களின் சிறந்த ஆயுர்வேத ஔஷதங்கள்.

நன்றாகப் பரீட்சிக்கப்பட்டது !

சென்ற இருபத்தைந்து வருஷங்களாக எல்லோராலும் உபயோகிக்கப்பட்டது !!

பிளேக் மருந்து.

1. எல்லாவித பிளேக் ஜ்வரங்களுக்கும் ஸஞ்சீவினி இதுவே.
2. முன் சாப்பிட்டால் பிளேக் வியாதியை வராமல் தடுக்கும்

விலை பெரியசெட் ரூ 2—2—0
,, சிறிய ,, ரூ 1—6—0

காலரா மருந்து.

1. இந்த ஔஷதத்தினால் காலரா விலகிப்போகும்.
2. சீக்கிரத்தில் வாந்தியையும் பேதியையும் போக்கும்.

விலை பெரிய செட் ரூ 1—2—0
,, சிறிய ,, ரூ 0—12—0

ஜீவாமிருதம்.

1. ஹிந்து தேசத்தில் நல்ல மூலிகைகளாலும் உலோகங்களாலும் தயார் செய்யப்பட்டது
2. ஆரோக்கியத்தையும் தைரியத்தையும் உண்டாக்கும்.
3. பலத்தையும் உத்ஸாகத்தையும் விர்த்தியாக்கும்.

விலை பெரிய சீசா ரூ 3—4—0
,, சிறிய ,, ரூ 1—12—0

அமிருதாமலக தைலம்.

1. வித்யார்த்திகளுக்கும் யோசனை ஜாஸ்தியுள்ளவர்களுக்கும் அதிக உபயோகமானது
2. நேத்திர ரோகிகளுக்கும் சிரோ ரோகிகளுக்கும ரொம்பவும் ஹிதமானது.

விலை பெரிய புட்டி ரூ 1—0—0
,, சிறிய ,, ரூ 0—8—0

பலவித வியாதிகளுக்கும் இவ்விடத்தில் மருந்துகள் கிடைக்கும். காட்லாக்கு இனமாக அனுப்பப்படும்.
தபால் சார்ஜும், பாக்கிங் கூலிகளும் பிரத்தியேகம்,
வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு
எழுதிப்பெற்றுக் கொள்ளவும்:—

மானேஜர்,
ஆயுர்வேதாசிரமம்,
55 ஆச்சாரப்பன் தெரு,
மதராஸ்.

ஜகப் பிரசித்தி பெற்ற
ஜின்டான் மாத்திரை.

எண்ணிலாக் குணங்கள் நிரம்பிய இந்த ஜின்டானை இப்போதே உபயோகியுங்கள். எல்லாக் காலத்திலும் யாவராலுமே நன்கு மதிக்கப்பெற்ற நாடெங்கும் பரவி பல பல வியாதிகளைக் கண்டித்தும் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் கைகண்ட முக்கியவிசேஷ குளிகைகள். இன்புளுயென்சா முதலிய கொடிய தொத்து வியாதிகளை அணுகவொட்டாமல் தடுப்பதற்கு இம் மாத்திரைகள் நிரம்பவும் குணமானவைகள்.

யாவரும் சுலபத்தில் அடையவேண்டி எல்லாக் கடைகளிலும் வியாபாரிகளிடத்திலும் எப்போதுமே விசாரிக்கப் பெறலாம் விலையோ சரசம்.

380 மாத்திரையும் கண்ணாடி பதித்த அந்தமான டப்பியுள்ள பாக்கெட் ரூ 1. 90 மாத்திரையும் சாதா டப்பியுடன் பாக்கெட்டுக்கு 4 அணா. 20 மாத்திரை பொட்டணம் 1 அணா

ஹோல் ஏஜண்டுகள்:—

எஸ் வைத்தியா அண்டு கோ

மதராஸ்.

பிராஞ்சிகள்:— திருச்சிக்கோட்டை & பங்களூர் ஸிடி. & கொழும்பு

N. B. ஸகல குடும்ப மருந்துகள், பேடெண்டுகள், டாபிலட்கள், பாலாமிருதம, மேலான பன்னீர், பல்பொடி, கூந்தல் தைலம், இங்கோ எஸ்ஸென்ஸ், பித்தளை மெழுகு வத்தி ஸ்டாண்டுகள், முதலிய பலவகை சுதேசிய சாமான்களுக்கும் ஏஜண்டுகள்.

எங்கள் மதுரை ஏஜண்டு:—

V. சின்னகிருஷ்ண நாயுடு,

ஸ்ரீ கிருஷ்ண ராஜா அண்டுகோ, மேலக்கோபுர வீதி, மதுரை.

ரூபா 100 இனம்.

உலகமெங்கும் பிரசித்தி பெற்ற சர்வ விஷ தேள்
விஷ சஞ்சீவி குணமில்லையென்று
ரூபிக்கிறவர்களுக்கு மேல்கண்ட ரூபாய் 100
இனம்.

தேள், மற்ற எவ்வித விஷகடியான போதிலும் எங்களின்

விஷ ஹரி

போட்ட ஒரு நிமிஷத்தில் விஷம் நீங்கி, சந்தோஷத்தை அடைவான்.

ஒரு பாகெட்டு விலை ரூ. 0—8—0
12 ஷை 5—0—0

இனம்:—3 பாக்கெட்டுகள் ஒரே தடவையில் வாங்குகிறவர்களுக்கு உலக பிரசித்திபெற்ற
ஒட்டோ கேஸரி புட்டி ஒன்று இனமாக கொடுக்கப்படும்

நூதன ரோம சங்காரி
என்னும்
காரனேஷன் சோப்

HAIR DESTROYER
CORONATION SOAP.

எவ்விடத்திலிருந்தாவது ரோமத்தை நீக்கக்கூடிய சக்தியைப்பெற்று இருக்கிறது. கணக்கில்லாத நற்சாட்சி பத்திரங்கள் கிடைத்து இருக்கிறது.

3 கட்டிகள் அடங்கிய பெட்டி 1-க்கு ரூ. 0—14—0
தபால் செலவு வேறு

விலாசம்:—
பி. ஸி. ஷா அண்டு கம்பெனி
259, சைனா பஜார் ரோட்,
மதராஸ்.

இந்தியாவில் மிகப்பெரிதும்
பழமையுமான வைத்யசாலை எது?
188‑-ஞூல் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட
ஆதங்கநிக்ரஹ
ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்
சஞ்சீவி
பாலமித்ர
300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1
வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்ருய் ஆலோசனெசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில எழுதப்படும்

இநத
ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிருர்கள்.

முதன்மையான
மருந்து சென்ற 35 ஞூல் காலமாய் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலததையும் மனேவன்மையையும் கொடுத்துப் பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள
32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலகோபுர வீதி
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து
காசாந்தக
மாத்ரைகள் டப்பி 1க்குவிலை ரூ 1
இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனேஉங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறோம்